RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-59 | 05 மார்ச் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## முதல்வர் ஸ்டாலினின் தாயார் மருத்துவமனையில் அனுமதி

சென்னை , மார்ச்.5



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் தாயார் தயாளு அம்மாள் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வயது முதிர்வின் காரணமாக ஏற்பட்ட பாதிப்பால் அவர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தயாளு அம்மாள், சென்னை கோபாலபுரத்தில் உள்ள இல்லத்தில் வசித்து வருகிறார். வயது முதிர்வு சார்ந்த அசவுகரியங்கள் காரண மாக அவர் கடந்த பல ஆண்டுகளாகவே பொதுவெளியில் வருவதில்லை. சமீபத்தில் தனது 72வது பிறந்தநாளைக் கொண்டாடிய முதல்வர் ஸ்டாலின் கோபாலபுரத்தில் உள்ள இல்லத்துக்குச் சென்று தனது தாயார் தயாளு அம்மாளிடம் ஆசி பெற்றுவந்தார்.

இந்நிலையில், தயாளு அம்மாளுக்கு திங்கள்கிழமை திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து சென்னை க்ரீம்ஸ் சாலை அப்பல்லோ மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட தயாளு அம்மாளுக்கு விரிவான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. தயாளு அம்மாளுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்ட விவரம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, தாயாரைக் காண மருத்துவமனைக்குச் சென்ற முதல்வர் ஸ்டாலின் அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் விசாரித்து அறிந்தார். தயாளு அம்மாளுக்கு 92 வயதாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிவகங்கை நகராட்சிக்கு உட்பட்ட 19-ஆவது வார்டு கழிவு நீரால் சூழ்ந்த அவலம்! நகராட்சி நிர்வாகம் கண்டுகொள்ளுமா?



சிவகங்கை மார்ச் 5

சிவகங்கை நகராட்சிக்கு உட்பட்ட 19 வது வார்டு பல வருடங்களாக கழிவுநீர் கால்வாய் இடிந்த நிலையில் நகராட்சி நிர்வாகம் கண்டு கொள்வதில்லை பலமுறை புகார் அளித்தும் எந்த பலனும் இல்லை அதிகமான கொசுக்களால் நிறைந்து வருகிறது ஆணையாளரிடம் கூறினாலும் அல்லது கண்காணிப்பாளர் கூறினாரோ எந்தவித பலனும் இல்லையா என்று கூறுகிறார்கள்.

மேலும் அப்பகுதியில் கௌதமர் தெருவுக்கு செல்லும் பாலம் இடிந்து சாக்கடை அடைபட்டு நிலையில் உள்ளது அதிக கொசுக்களாலும் கழிவுநீர் துர்நாற்றத்தாலும் அப்பகுதியில் 300 குடும்பத்திற்கு மேல் வசித்து வருகிறார்கள் முகம் சுளித்தபடியே அந்த பகுதியை கடந்து செல்லும் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர் சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து வார்டுகளும் தூய்மையாக இருக்கும் பொழுது 19 வது வார்டு தியாகி சேதுராமச்சந்திரன் தெரு கௌதமர்திரு செல்லும் பாதை மட்டும் ஏன் தீவாக ஒதுக்கப்பட்டு வந்த அவல நிலை என்று புரியவில்லை என்று அப்பகுதிவசித்து வரும் மக்கள் கூறுகிறார்கள் ஆற்றல்மிக்க ஆட்சியரின் பார்வைக்கு ஏன் இந்த பகுதிகள் தெரியவில்லை என்றும் சிவகங்கையில் இருக்கும் இடங்களை விட்டுவிட்டு சிவகங்கை சுற்றியுள்ள பகுதிகளில் சீரமைக்கிறார் என்றும் குறை கூறி வருகின்றனர்.

அதே நேரத்தில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் சிவகங்கை நகருக்கு உள்ளே வருவதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்து வருகிறது அதே நேரத்தில் அமைச்சர் பெருமகனார் திருப்பத்துறை மட்டுமே அதை சுற்றியுள்ள பகுதிகளை மட்டுமே கவனிப்பதாகவும் சிவகங்கை ஜெயித்ததால் கண்டுகொள்ளவில்லை என்றும் கூறுகிறார்கள் இது குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்குமா?என்ற கேள்வி எழுந்துள்ளது மாவட்ட ஆட்சியரின் மேலான கவனத்திற்கு எடுத்துரைக்கும்படியும் கூறுகிறார்கள் நகரமன்ற தலைவர் பலமுறை அப்பகுதியை சுத்தம் செய்யுங்கள் என்று கூறியும் அவர்களின் பேச்சையே கேட்காத ஊழியர்களாக உள்ளார்கள் என்று வருத்தம் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியைச் சார்ந்த கவுன்சிலரோ தெருக்களிக்குள்ளோ அப்பகுதி குழு செல்வதே இல்லை அவர் வீட்டு அந்த பகுதியில் தான் உள்ளது ஆனால் அந்த பகுதி மட்டும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் உள்ளது அது எவ்வாறு என்று புரியவில்லை என்று சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## திமுக அரசின் திட்டங்களை ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும்: உதயநிதி அறிவுறுத்தல்

சென்னை, மார்ச்.5



திமுக செயல்படுத்தி வரும் திட்டங்களின் விவரங்களை அடுத்த ஓராண்டில், ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என திமுக நிர்வாகிகளுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை முகாம் அலுவலகத்தில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியை சேர்ந்த திமுக நிர்வாகியின் திருமணத்தை, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்.

தொடர்ந்து மணவிழா நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: இன்னும் ஒரு ஆண்டில் தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளது. அந்த தேர்தலுக்கு நாம் இப்போதில் இருந்தே தயாராக வேண்டும்.

கடந்த 4 ஆண்டுகளில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சியில் என்னென்ன திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தி வருகின்றார் என்பதை அடுத்த ஓராண்டு, ஒவ்வொரு வாக்காளராக சந்தித்து, நாம் எடுத்துச்சொல்ல வேண்டும்.

குறிப்பாக மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, மகளிருக்கு விடியல் பயணம் என பல திட்டங்களை முதல்வர் நிறைவேற்றி செயல்படுத்தி இருக்கிறார்.

இந்த திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டுமென்றால், இதுபோன்ற பல நல்ல திட்டங்கள் தமிழக மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்றால் வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் 234 தொகுதிகளில் 200 தொகுதியாவது நாம் இலக்காக நிர்ணயித்து ஜெயித்து காட்ட வேண்டும்.

அதற்கு முன்மாதிரியாக சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியின் வெற்றி அமைய வேண்டும். எனவே உங்களில் யாரை வேட்பாளராக நிறுத்தினாலும், அவருடைய வெற்றிக்கு உழைத்து, வெற்றியை நீங்கள் உறுதி செய்யவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## ‘இந்தி திணிப்பல்ல; தொழில்நுட்பமே தேவை’ முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மார்ச்.5



“ஒவ்வொரு மொழிக்கும் தேவையான தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொள்வதுதான் மாணவர்களின் எதிர்காலத்திற்கு மிகுந்த பயனளிக்கும். அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மொழியையும் மாணவர்களிடம் திணிக்க முயற்சிப்பது அவர்களுக்கு சுமையாகவே அமையும்” என்று திமுக தொண்டர்களுக்கு முரசொலி பத்திரிகையில் எழுதியுள்ள கடிதத்தில் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்ற தலைப்பில் அவர் தொண்டர்களுக்கு எழுதும் 7வது கடிதம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அக்கடிதத்தின் விவரம் வருமாறு: மும்மொழித் திட்டம் என்ற பெயரால் இந்தியைத் திணிக்க முயற்சிப்பதைத் தடுத்திடவும், தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரால் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைத்திடவும் ஒன்றிய பாஜக அரசு முயற்சிக்கிறது. இவற்றை எதிர்கொள்ளும் வலிமை கொண்ட திமுகவின் தலைவரான என் மீது கூட்டணிக் கட்சித் தலைவர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். இந்தித் திணிப்பை எதிர்க்கும் இலக்கை நோக்கி தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்.

பாஜக நிர்வாகியான தமிழிசை சவுந்திரராஜன் எனக்கு ‘மும்மொழி’யில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துப் பதிவிட்டிருந்தார். மும்மொழித் திட்டத்தை ஏன் எதிர்க்கிறோம் என்பதை விளக்கி என்னுடைய பிறந்தநாள் செய்தியை நான் வெளியிட்டிருந்த நிலையில், சகோதரி மும்மொழியில் வாழ்த்தி தன் அன்பையும், தன் இயக்கத்திற்குரிய ‘பண்பையும்’ காட்டியிருக்கிறார். சகோதரி தமிழிசையின் வாழ்த்துச் செய்திக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழிசையின் மும்மொழி வாழ்த்தில் ‘இந்தி’ இடம்பெறவில்லை. அதுதான் தமிழ்நாட்டில் நிலவுகிற உணர்வின் வெளிப்பாடு.

தமிழ் ஆங்கிலம் இரண்டு மொழிகளில் அமைந்த வாழ்த்துக்குப் பிறகு, தெலுங்கு மொழியில் வாழ்த்தியிருக்கிறார். உங்களில் ஒருவனான எனக்கு தெலுங்கு தெரியாது. நான் படித்ததும் இல்லை. தெலுங்கானா மாநில ஆளுநராக இருந்த சகோதரி தமிழிசை தெலுங்கு மொழியை அறிந்திருக்க வாய்ப்புண்டு.

ஆனால், அவர் தெலுங்கு மொழியைப் பள்ளிப் பருவத்திலேயே படித்து அதனைத் தெரிந்துகொள்ளவில்லை. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலத்தில் பணியாற்றியதால், பழக்கத்தின் மூலமாக அறிந்து கொண்டிருக்கிறார். இதிலிருந்தே, மூன்றாவதாக ஒரு மொழியை வலிந்து படிக்க வேண்டியதில்லை என்பதையும், தேவைப்படுகிறவர்கள் அதனைப் புரிந்து கொண்டு பயன்படுத்த முடியும் என்கிற திராவிட இயக்கத்தின் கொள்கை வழியிலான தமிழ்நாட்டின் உணர்வையும் எனக்கானப் பிறந்தநாள் வாழ்த்துப் பதிவின் மூலம் உறுதிப்படுத்தியுள்ள சகோதரி தமிழிசைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மொழிக்கும் தேவையான தொழில் நுட்பத்தைக் கற்றுக்கொள்வது தான் மாணவர்களின் எதிர்காலத்திற்கு மிகுந்த பயனளிக்கும். அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மொழியையும் மாணவர்களிடம் திணிக்க முயற்சிப்பது அவர்களுக்கு சுமையாகவே அமையும். கல்வியாளர்கள், மொழி அறிஞர்கள், குழந்தைகள் நல செயல்பாட்டாளர்கள், மருத்துவத்துறையினர் உள்ளிட்ட அறிவியல் சார்ந்த பார்வை கொண்ட பலரும் இதைத்தான் தெரிவிக்கின்றனர். அறிவியலைப் புறக்கணிக்கும் கட்சியான பாஜகவும் அதன் நிர்வாகிகளும் மொழித் திணிப்பைக் கட்டாயமாக்கு கிறார்கள்.

ஒருவர் விரும்புகிற எந்த மொழிக்கும் நாங்கள் எதிரிகளல்ல. எந்த மொழியையும் எங்கள் மீது திணிக்காதீர்கள் என்பதைத்தான் அன்று முதல் இன்று வரை தெளிவாகச் சொல்கிறோம். ஆறறிவு கொண்ட அனைவருக்கும் இது புரிகிறது. ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு மட்டும் ஏன் புரியவில்லை? புரியாமல் இல்லை. புரியாதது போல பாசாங்கு செய்கிறார்கள். அவர்களின் நோக்கம் ஏதேனும் மூன்று மொழி என்பதல்ல.

இந்தியாவின் தென்மாநிலங்களில் உள்ளவர்கள் இந்தி மொழியைக் கற்பதும், வட மாநிலத்தவர்கள் தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக் கற்பதும் தேச ஒற்றுமைக்கு வழிவகுக்குமென காந்தியடிகள் நம்பினார். அவருடைய விருப்பத்தின் அடிப்படையில் உருவானதுதான் தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா. சென்னையில் உள்ள அதன் தலைமை நிலையத்திற்கு காந்தியடிகளே நேரில் வந்து நிகழ்வுகளில் பங்கேற்றிருக்கிறார். தற்போது 6000 மையங்களுடன் தென்மாநிலங்கள் முழுவதும் இந்தி பிரச்சார சபா இயங்கி வருகிறது.


தென்னிந்தியர்கள் இந்தியைக் கற்க தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா நிறுவப்பட்டதுபோல, வடஇந்தியாவில் தென்னிந்திய மொழி ஒன்றைக் கற்றுக்கொள்ள உத்தர பாரத தமிழ் பிரச்சார சபாவையோ, திராவிட பாஷா சபாவையோ நிறுவ முடிந்ததா?

வள்ளுவர் சிலையை கங்கை கரையில் நிறுவுவதாக சொல்லி குப்பை மேட்டில் போட்டவர்களா தமிழ் கற்றுத் தருவதற்கான அமைப்பை நிறுவப் போகிறார்கள்? கோட்சே வழியைப் பின்பற்றும் இயக்கத்தினர் காந்தியின் நோக்கத்தை ஒரு போதும் நிறைவேற்ற மாட்டார்கள்.

சென்னை மாகாணம் என்ற பெயர் இருந்த காலத்திலேயே ‘தமிழ்நாடு காங்கிரஸ்’ என்று பெயர் வைக்கச் செய்தவர் காந்தியடிகள். தமிழ்நாட்டில் தற்போது ஓடும் ரயில்களுக்கு கூட இந்தி சமஸ்கிருதப் பெயர்களை வைப்பவர்கள் ஒன்றிய பாஜக ஆட்சியாளர்கள். தமிழையும் பிற மொழிகளையும் அழிப்பதுதான் அவர்களின் ரகசியத் திட்டம். அதை வெளிப் படையாக எதிர்க்கும் வலிமை கொண்டதுதான் திராவிட இயக்கம். இவ்வாறு ஸ்டாலின் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## திருப்பதி திருமலை விமானங்கள் பறக்க தடைசெய்யப்பட்ட மண்டலமாக மாறுகிறதா? TTDயின் கோரிக்கைக்கு மத்திய அரசு பதில்!

புதுடில்லி, மார்ச்.5



உலகப்புகழ்பெற்ற திருமலை திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். பக்தர்களின் வசதிக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திருப்பதிக்கு விமான சேவை, ரயில் சேவை மற்றும் பேருந்து சேவை ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. திருப்பதி விமான நிலையம் உலக சர்வதேசமான நிலையத்திற்கு சமமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

திருப்பதி விமான நிலைய ஓடுபாதைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு அதி நவீன தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் திருமலையை விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்குமாறு திருமலை திருப்பதி தேவஸ்தானம் மத்திய விமான போக்குவரத்து அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்து இருந்தத. புனித யாத்திரை தளமான திருப்பதி திருமலை மீது விமானங்கள் பறப்பதை தடுக்க திருமலையை விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்க கோரி TTD நிர்வாகம் மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியது.

ஜிஜிஜி தலைவர் பிஆர் நாயுடு எழுதிய கடிதத்தில், கோயிலின் புனிதத்தன்மை, பாதுகாப்பு காரணங்கள் மற்றும் பக்தர்களின் உணர்வுகள் குறித்து குறிப்பிட்டிருந்த அவர், திருமலையில் தாழ்வாகப் பறக்கும் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் பிற வான்வழி நடவடிக்கைகள் ஏழுமலையான் கோயிலைச் சுற்றியுள்ள புனித சூழலைப் பாதிக்கின்றன என்று சுட்டிக் காட்டியிருந்தார்.

திருமலையை பறக்கத் தடைசெய்யப்பட்ட மண்டலமாக அறிவிப்பது, கோவிலின் புனிதத்தன்மை மற்றும் கலாச்சார மற்றும் ஆன்மீக பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கியமான படி என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்த விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அமைச்சரையும் திருமலை திருப்பதி தேவஸ்தான தலைவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் கோரிக்கை குறித்து மத்திய விமான போக்குவரத்து அமைச்சர் நாயுடு கருத்து தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவரிடம் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் கடிதம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்த அவர், மாற்று விமான வழித்தடங்களை ஆராய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுடன் அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக தெரிவித்தார்.

மேலும் ஒரு பகுதியை ‘பறக்கத் தடை’ மண்டலமாக அறிவிப்பதற்கு எந்த ஏற்பாடும் இல்லை என்றும் அமைச்சர் ராம மோகன் நாயுடு தெளிவுப்படுத்தினார். இதனால் திருமலை திருப்பதி கோவில் பறக்க தடை செய்யப்பட்ட மண்டலமாக மாறுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் பெற்றுக்கொண்டார். தகுதியான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## நன்மங்கலம் திமுக சார்பில் முதலமைச்சர் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம் வழங்கல்



சோழிங்கநல்லூர் மார்ச்.5

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட நன்மங்கலம் ஊராட்சியில் திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு அருஞ்சுவை உணவு அன்னதானம் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்த்து துறை அமைச்சருமான மா.சுபிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வாழ்த்துக்களுடன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் மற்றும் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன் முன்னிலையில் நன்மங்கலம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் காலை 10 :30 மணிக்கு நன்மங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் கிரி தலைமையில் நடைபெற்ற விழாவில் திராவிட முன்னேற்ற கழகக் கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி, அருஞ்சுவை உணவு பரிமாறி பிறந்த நாளை விழாவை கொண்டாடினர். மேலும் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம் என்று பிறந்தநாள் விழாவில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது..

## சைதாப்பேட்டையில் லைன்ஸ் சங்கம் சார்பில் வட்டாரக்கூடல் விழா






சைதாப்பேட்டை மார்ச்.5

சைதாப்பேட்டையில் லைன்ஸ் சங்கம் சார்பில் நடைபெற்ற வட்டாரக்கூடல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது

சென்னையில் உள்ள சைதாப்பேட்டை தனியார் விழா அரங்கில் பன்னாட்டு அரிமா சங்கங்கள் சார்பில் நடைபெற்ற வட்டாரக்கூடல் விழா நிகழ்ச்சி அரிமா 324 எம் மாவட்ட வட்டார தலைவர் ஜவகர் உமாபதி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது இதில் சங்கமம், ஆக்டோஜென், கிரீன் சிட்டி, மெட்ரோ சென்டர், எம்.பி மணிவாணன், கிரேட் மிஷின், மெரினா கார்டன் ஆகிய அரிமா சங்கங்கள் இணைந்து வட்டார தலைவர் ஜவகர் உமாபதி அவர்களுக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி அவர்களுக்கு மிகச் சிறப்பாக வரவேற்பளிக்கப்பட்டது இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கவர்னர் லயன் வரதராஜன், லயன் ஸ்ரீதர், லயன் மாணிக்கம், லயன் ரவிச்சந்திரன், லயன் பாலாஜி ரத்தினம், லயன் குணராஜா, லயன் போஸ், லயன் ராஜேஷ் ஜோஷி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி அனைவருக்கும் கௌரவிக்கப் பட்டது

இந்த நிகழ்ச்சியில் அனைத்து சங்கத்தினர் கலந்து கொண்டு மாவட்டம் வட்டார நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து பொருட்களை வழங்கி கௌரவிக்கப்பட்டது நிகழ்ச்சியில் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..




இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள நயினார் கோவிலில் திமுக செயல் தலைவரும் தமிழக முதலமைச்சரும் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு திமுக நிர்வாகிகள் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் திமுக கொடிகளை ஏற்றிய தங்களது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினார். இந்த நிகழ்வில் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் கணேசன் , மாவட்ட பிரதிநிதி கோவிந்தன், ஊராட்சி மன்ற தலைவர் ஜோதிமணி, திமுக நிர்வாகிகள் கருமலையான், முகேஷ், பூமிநாதன், முத்துராமலிங்கம் உட்பட பலர் நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை நயினார் கோவில் திமுக கிளை கழக செயலாளர் அரசுமணி செய்திருந்தார்.

## குன்றக்குடியில் நகையை மிரட்டி பறித்து சென்றவர்கள் கைது







சிவகங்கை மார்ச்.5

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி உட்கோட்டம் குன்றக்குடி காவல் நிலையத்திற்குட்பட்ட கோவிலூர் ரோட்டில் கடந்த 27.02.25 அன்று கண்டதேவி கிராமத்தைச் சேர்ந்த மனோஜ் என்பவரிடம் அடையாளம் தெரியாத இரு நபர்கள் 1 பவுன் தங்க நகையை மிரட்டி பறித்துச் சென்றது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக சார்பு ஆய்வாளர் பிரேம்குமார் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தேடப்பட்டு வந்த நிலையில், மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட கோவிலூரைச் சேர்ந்த சுரேஷ் (30) மற்றும் நாச்சியாபுரத்தைச் சேர்ந்த அழகேஷ்(27) ஆகியோர் கண்டறியப்பட்டு, கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து நகை மீட்கப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## மகனின் ஆசைக்காக மேடையிலேயே இரண்டாவது முறையாக காதுகுத்திக்கொண்ட தந்தை! உறவினர்கள் நெகிழ்ச்சி



சிவகங்கை மார்ச்.5

சிவகங்கை மதுரை முக்கு பகுதியை சேர்ந்தவர்கள் சேகர் செல்வராணி தம்பதியர் இவர்களது மகன் விஸ்வன்நாதன்ஸ், சேகர் வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் நிலையில் செல்வராணி சிவகங்கை மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார். சேகர் அண்மையில் சொந்த ஊர் திரும்பிய நிலையில் மகன் விஸ்வன்நாதன்ஸ்க்கு காதுகுத்து விழா நடத்த முடிவு செய்து பத்திரிக்கை அடித்து தாய்மாமன் உட்பட அனைவருக்கும் வழங்கி

நேற்று அந்த காதுகுத்து நிகழ்ச்சியும் நடைபெற்றது. முன்னதாக மகன் விஸ்வன்நாதன்ஸ் தந்தையான சேகருக்கும் தன்னைபோல காது குத்த வேண்டும் என அடம்பிடிக்கவே அதனை ஏற்றுக்கொண்ட தந்தை சேகர் மகனின் ஆசையை நிறைவேற்றும் வண்ணம் அவரும் அதே மேடையில் காதுகுத்திக்கொண்டார். ஒரே மேடையில் 10 வயதான மகன் விவன்நாதன்ஸ் தனது தாய் மாமனான முனிஸ் மடியில் அமர வைத்து காது குத்தி முடித்தவுடன் அதனை தொடர்ந்து 45 வயதான சேகர் தனது தாய்மாமன் அருகே அமர்ந்து இரண்டாவது முறையாக தனது காதை குத்திக்கொண்டு தோடினை அனிந்துகொண்டார். மகனின் ஆசைக்காக தந்தையும் அதே விழா மேடையில் இரண்டாவது முறையாக காதுகுத்திக்கொண்டது நிகழ்ச்சிக்கு வந்திருந்த உறவினர்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## திருப்பூரில் மகளிர் விடுதி மற்றும் இல்லங்கள் பதிவு செய்திட இணையதள முகவரி அறிமுகம் மாவட்ட ஆட்சியர்



திருப்பூர் மார்ச்.5

திருப்பூர் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மாணவ/ மாணவியருக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் பணிபுரியும் மகளிர் விடுதி மற்றும் இல்லங்கள் Tamilnadu hostels and home for women and children (Regulation) act 2014ன் கீழ்கட்டாயம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் திருப்பூர் மாவட்டத்தில் நாளது தேதி வரை 137 தனியார் பணி புரியும் மகளிர் விடுதிகள் மட்டுமே சட்டத்தின் படி பதிவு பதிவு செய்யப்பட்டுள்ளது மேலும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி கல்லூரி மற்றும் பணி புரியும் மகளிர் விடுதிகளும் கட்டாயம் பதிவு செய்யப்பட்டு உரிமம் பெற்ற பிறகு செயல்பட வேண்டும் என்பதால் பதிவு செய்யப்படாத விடுதிகள் https://tnswp.com என்ற இணையதள முகவரி வாயிலாக கீழ்காணும் 6 ஆவணங்களுடன் பதிவு செய்திட அறிவுறுத்தப்படுகிறது 1) அறக்கட்டளை பதிவு பத்திரம், 2) சொந்த கட்டிடம்/ வாடகை ஒப்பந்த பத்திரம்,3) கட்டிட வரைபடம், 4) கட்டிட உறுதிச் சான்று, 5) தீயணைப்புத் துறையின் தடையில்லா சான்று, 6) சுகாதாரச் சான்று ஆகியவைகளை விடுதி நிர்வாகிகள் தங்களது விடுதி மற்றும் இல்லங்களை மேல் காணும் இணையதளம் முகவரியில் 20/03/2025 அன்று மாலை 5 மணிக்குள் பதிவு செய்திட வேண்டும் இச்செய்தி வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு முறையாக பதிவு செய்யப்படாத தனியார் விடுதி ,இல்ல நிர்வாகிகள் மற்றும் மேலாளர்கள் மீது சட்டப்பிரிவு 20 மற்றும் உட்பிரிவு 2ன் படி காவல்துறையின் மூலம் வழக்கு பதிவு செய்து இரண்டு ஆண்டுகள் காண சிறை தண்டனையும் ரூபாய் 50,000 அபராதமும் விதிக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ் தகவல் தெரிவித்துள்ளார்.

## திண்டுக்கல்லில் விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் பங்கேற்பு



திண்டுக்கல் மார்ச்.5

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தலைமையில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 257 பயனாளிகளுக்கு ரூ.1.87 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தனியாக வேளாண் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது . 2023 ஆம் ஆண்டு பருவமழை தவறியதன் காரணமாகவும், தென்மேற்கு பருவமழை கனமழையாக பெய்ததன் காரணமாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவிகள் வழங்கப்படுகிறது. அதன்படி, தமிழக அரசு, அத்தகைய பேரிடர் காலங்களில் மக்களின் துயர் துடைக்க நிவாரண நிதி வழங்குகிறது. மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.8,500, இறவை பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.17,000 என்ற விகிதத்தில் நிதி வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு பெய்த மழையில் வேளாண்மை பயிர்களான நெல் மற்றும் மக்காச்சோள பயிர்கள் 234.64 ஹெக்டேரில் பாதிப்படைந்து அதற்கான நிவாரண நிதி, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மாவட்ட முழுவதும் ரூ.30.36 இலட்சம், 384 விவசாயிகளுக்கு தற்போது வழங்கப்படுகிறது. விவசாயிகளின் வங்கி கணக்குகளில் நிவாரணத் தொகை செலுத்தப்படவுள்ளது. எனவே, விவசாயிகளுக்கு வழங்கப்படும் இத்தொகையை வேளாண் பணிகளுக்கு பயன்படுத்தி மகசூலை பெருக்கி பயனடைய வேண்டும் என்றார், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 54 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் ரூ.54.97 இலட்சம் மதிப்பீட்டிலும், வேளாண்மைத்துறை சார்பில் 176 பயனாளிகளுக்கு பயிர் இழப்பீட்டுத்தொகை ரூ.19.10 இலட்சம் மதிப்பீட்டிலும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் ரூ.20,070 மதிப்பீட்டிலும், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 14 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவி ரூ.1.01 கோடி மதிப்பீட்டிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு இலவச தேய்ப்புப் பெட்டி ரூ.33,500 மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு வெங்காய சேமிப்பு கிடங்கு, நிலையான பந்தல் அமைத்தல் மானியம் ரூ.6.10 இலட்சம் என ஆக மொத்தம் 257 பயனாளிகளுக்கு ரூ.1.87 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## சிவகங்கை புத்தகத் திருவிழாவில் பல்வேறு போட்டிகளில் அசத்திய தனியார் பள்ளி மாணவர்கள்







மானாமதுரை மார்ச்.5

சிவகங்கை மாவட்டத்தில் 4வது புத்தகத் திருவிழா நடைபெற்று கொண்டிருக்கிறது. இதில் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

அப்புத்தகத்திருவிழாவில் மாணவர்கள் வில்லுப்பாட்டில் கலந்து கொண்டு நூலகத்தின் சிறப்பினை பாடலாக பாடியது பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது.பானை ஓவியம் மற்றும் திரைப்படம்பார்த்து மதிப்புரை செய்தல் போன்ற போட்டிகள் நடைப்பெற்றது.

மானாமதுரை வட்டார அளவில் நடைபெற்ற திரைப்படம் பார்த்து மதிப்புரை செய்தல் போட்டியில் ஷார்மி ஒன்பதாம் வகுப்பு முதல் இடமும் பிரதீப் ஒன்பதாம் வகுப்பு இரண்டாம் இடமும் மற்றும் பானை ஓவியப் போட்டியில் ஸ்ரீ கோபிகா ஒன்பதாம் வகுப்பு மூன்றாம் இடமும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்தனர்.மேலும் மாணவர்கள் தங்களின் அறிவைப் பெருக்கும் விதமாக பல புத்தகங்களை வாங்கியும் பயனடைந்தார்கள்.

இப்புத்தகத்திருவிழாவில் பள்ளியின் தாளாளர் கபிலன் பள்ளிக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி கொடுத்தார்.பள்ளியின் நிர்வாகி மீனாட்சி,பள்ளியின் முதல்வர் சாரதா மற்றும் ஆசிரியர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி

கன்னியாகுமரி, மார்ச்.5

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகு மீனா, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 396 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.32,850 மதிப்பில் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகள், ரூ.1.06 இலட்சம் மதிப்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி, ரூ.19,000 மதிப்பில் 7 மாற்றுத் தினாளிகளுக்கு செயற்கை கால்களும், 7 மாற்றுத் தினாளிகளுக்கு மூடநீக்கு உபகரணங்கள் என மொத்தம் 25 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, நாகர் கோவில் வருவாய் கோட்டாட் சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சேக் அப்துல் காதர், துணை காவல் கண்காணிப்பாளர் மதியழகன், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் சிவகாமி, மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் தினேஷ் சந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கனகராஜ், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# தென்காசி மாவட்டம் அனைத்து துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

தென்காசி, மார்ச்.5




தென்காசி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், பல்வேறு துறைகள் சார்ந்த திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து, அனைத்துதுறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் திரு,பொ. சங்கர், தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பேசியதாவது;

தென்காசி மாவட்டத்தில் அடிப்படை வசதிகளான கழிப்பிடவசதி, இருப்பிட வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகளை ஆய்வு செய்து பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும். பேரிடர் காலங்களில் பொதுமக்கள் செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவை பற்றி அறிவுரை வழங்க வேண்டும். அவசர கால கட்டுப்பாட்டு எண் 1077 என்ற கட்டணமில்லா எண்ணை தொடர்பு கொள்ள வேண்டி விழிப்புணர்வு பதாகைகளை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் அமைத்திட வேண் டும். மாவட்ட ஆட்சியர் அலு வலக கட்டுப்பாட்டு அறை யில் 24 மணிநேரமும் அலுவலர் களை நியமனம் செய்ய வேண் டும் உள்ளிட்ட பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட் டுள்ளது. தமிழ்நாடு முதலமைச் சர் பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்தகைய திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்திடவும், பொதுமக்களுக்கு சென்ற டைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணித் திடவும், இயற்கை பேரிடர் காலங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் ஒருங் கிணைந்து பணியாற்றிடவும், பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காக, மாவட்ட கண்காணிப்பு அலுவலராக நியமனம் செயதுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் பல்வேறு துறைகள் சார்ந்த திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, அனைத்து துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேணுகோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ மற்றும் அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சி காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்லூரிகளுக்கு இடையிலான கைப்பந்து (Handball) போட்டியில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவிகள் அணி வெற்றி பெற்றனர் இளையான்குடி Dr. ஜாகிர் உசேன் கல்லூரியில் கடந்த இரண்டு நாட்கள் நடைபெற்ற அழகப்பா பல்கலைக்கழக அனைத்து கல்லூரிகளுக்கு இடையிலான பெண்களுக்கான கைப்பந்து போட்டியில் அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவிகள் அணியினர் இரண்டாம் இடத்திற்கான கோப்பையை வென்றார்கள் , மேலும் இப்போட்டிகளில் சிறப்பாக . விளையாடிய தேன்மொழி , திவ்ய சௌந்தர்யா, ஐஸ்வர்யா மற்றும் ஜெயந்தி ஆகிய நான்கு வீராங்கனைகளும் அழகப்பா பல்கலைக்கழக ஹேண்ட்பால் அணிக்கு தேர்வு செய்யப்பட்டு சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் தென்மண்டல அனைத்து பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பெண்கள் கைப்பந்து போட்டிகளில் பங்கு பெற உள்ளனர் , வெற்றி பெற்ற வீராங்கனைகளை கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி, உடற்கல்வி இயக்குநர் அசோக்குமார், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டி வாழ்த்தினர்.







தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை, அண்ணா சாலை, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி) நடைபெற்ற அரசு விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதி பேட்மாநகரில் கட்டப்பட்டுள்ள "முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கத்தை" காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், இ.ஆ.ப., தலைமையில் திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி.செ.அமிர்தராஜ் அவர்கள், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர்.எம்.சி.சண்முகையா ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டார்.







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியரேந்தல் கிராமத்திற்கு செல்லும் தடம் எண் 16 அரசு டவுன் பேருந்து இயங்கிக் கொண்டிருந்தது. பழைய பேருந்து நீக்கிவிட்டு இன்று முதல் புதிய நீல நிறம் கொண்ட பேருந்து சேவை நேற்று முதல் தொடங்கப்பட்டது . நீண்ட நாட்களுக்குப் பிறகு புதுப்பொலிவுடன் வந்த பேருந்திற்கு கிராம பொதுமக்கள் ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்தனர். இந்த புதிய வெளிர் நீலநிற டவுன் பஸ்கள் தனியார் பஸ்களை விட ஸ்டைலாக இருப்பதாகவும் பஸ் இருக்கையும் பஸ்சின் உட்பகுதியில் போதிய இடவசதி இருப்பதாகவும் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் எளிதாக இருப்பதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

# கோவிலம்பாக்கம் திமுக சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், அன்னதானம்

சோழிங்கநல்லூர் மார்ச்.5




சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவிலம்பாக்கம் ஊராட்சியில் திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு 1000ற்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள், அருஞ் சுவை உணவு அன்னதானம் வழங்கி சிறப்பாக நடைபெற்றது.

மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்த்து துறை அமைச்சரு மான மா.சுபிரமணியன், தென் சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் வாழ்த்துக் களுடன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த்ரமேஷ் முன்னிலையில் கோவிலம்பாக்கம் இந்திரபுரி நியாய விலை கடை, சுண்ணாம்பு குளத்தூர் அருகில் அருகில் காலை 10 மணிக்கு கோவிலம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன் மற்றும் 5வது வார்டு உறுப்பினர் சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில் திராவிட முன்னேற்ற கழகக் கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி, 1000ற்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள், அருஞ்சுவை உணவு பரிமாறி பிறந்த நாளை விழாவை கொண்டாடினர். மேலும் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம் என்று பிறந்தநாள் விழாவில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொலை வழக்கில் உதவியாளர் கைது எதிரொலி மகாராஷ்டிரா அமைச்சர் தனஞ்சய் முண்டே ராஜினாமா

மும்பை, மார்ச்.5



மகாராஷ்டிராவில் கிராமத் தலைவர் ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் அமைச் சர் தனஞ்சய் முண்டேவின் நெருங்கிய உதவியாளர் கைது செய்யப்பட்டதை அடுத்து, அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது மகாராஷ்டிரா ஒழுங்கமைக்கப் பட்ட குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் (விசிளிசிகி) போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதுவரை ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் இன்னும் தலைமறைவாக உள்ளார்.

## கொலை

மகாராஷ்டிராவின் பீட் மாவட்டத்தின் மசாஜோக் கிராமத்தின் தலைவராக இருந்த சந்தோஷ் தேஷ்முக் என்பவர் கடந்த ஆண்டு டிசம்பர் 9ம் தேதி கடத்தப்பட்டு, சித்ரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். ஒரு எரிசக்தி நிறுவனத்தை குறிவைத்து மிரட்டிப் பணம் பறிக்கும் முயற்சியைத் தடுக்க முயன்றதாகக் கூறி அவர் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பாகவும், அவாடா நிறுவனத்திடமிருந்து பணம் பறிக்க முயன்றது மற்றும் நிறுவனத்தின் பாதுகாவலர் மீது தாக்குதல் நடத்தியது ஆகிய 3 வழக்குகள் தொடர்பாக மாநில குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) விசாரணை நடத்தியது. மேலும், பிப்ரவரி 27 அன்று பீட் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றத்தில் 1,200 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை சிஐடி தாக்கல் செய்தது.

இந்த கொலை வழக்கில் அமைச்சர் தனஞ்சய் முண்டேவின் நெருங்கிய உதவியாளர் வால்மிக் கரட்டின் பெயரும் குற்றப்பத்திரிகையில் இடம்பெற்ற நிலையில் அவர் கைது செய்யப்பட்டார். இதையடுத்து, மாநில உணவு மற்றும் சிவில் சப்ளை அமைச்சரும், பீட் மாவட்டத்தின் பார்லி பகுதியைச் சேர்ந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினருமான தனஞ்சய் முண்டே பதவி விலக வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் சட்டப்பேரவையில் அமளியில் ஈடுபட்டன.

சட்டப்பேரவையில் இதற்கு பதில் அளித்துப் பேசிய முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரி வித்தார். இந்த வழக்கில் தனஞ்சய் முண்டேவின் பெயர் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்படவில்லை. எனினும், கொலைக்கு மூளையாக செயல்பட்ட வால்மிக் கரட், தனஞ்சய் முண்டேவின் நெருங்கிய உதவியாளர் என்பதால் இந்த விவகாரம் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

## ராஜினாமா

இந்நிலையில், அமைச்சர் தனஞ்சய் முண்டே நேற்று (செவ்வாய்கிழமை) தனது பதவியை ராஜினாமா செய்தார். முண்டேவின் ராஜினாமாவை தான் ஏற்றுக்கொண்டதாகவும், நடவடிக்கைக்காக அதனை ஆளுநருக்கு அனுப்பியுள்ள தாகவும் முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் தெரிவித்துள்ளார்.

முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் கேட்டுக் கொண் டதை அடுத்தே, தனஞ்சய் முண்டே தனது பதவியை ராஜினாமா செய்ததாகக் கூறப்படுகிறது. இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள தேசியவாத காங்கிரஸ் தலைவரும் துணை முதல்வருமான அஜித் பவார், தார்மிக அடிப்படையில் முண்டே ராஜினாமா செய்ததாக கூறியுள்ளார்.

இந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது மகாராஷ்டிரா ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் (விசிளி சிகி) போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதுவரை ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் இன்னும் தலைமறைவாக உள்ளார்.



கன்னியாகுமரி மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் கீழ் செயல்பட்டு வரும் குருந்தன்கோடு, வெள்ளிசந்தை, நடுவூர்கரை உள்ளிட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் குளச்சல் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கர்ப்பிணி பெண்கள் மற்றும் பிரசவித்த தாய்மார்களுக்கு வழங்கப்படும் உணவுகள் குறித்தும், இரத்த சோகை வராமல் தடுப்பதற்கு இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கப்படுகிறா என்பது குறித்தும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்டறிந்தார்.



திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில் மைய அலுவலகத்தில் மாமன்ற கூட்டரங்கில் மாமன்ற கூட்டம் நடைபெற்றது. உடன் ஆணையாளர் ராமமூர்த்தி, துணை மேயர் பாலசுப்ரமணியம், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கூடுவாஞ்சேரி நகர திமுக சார்பில் தமிழக முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கிய அமைச்சர்



செங்கல்பட்டு, மார்ச்.5

கூடுவாஞ்சேரியில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு 500 பேருக்கு அறுசுவை உணவு தா.மோ.அன்பரசன் (ம) எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன் வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழா தமிழகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இதில் செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ் சேரி நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா கூடுவாஞ் சேரி பேருந்து நிலையம் அருகே வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் திமுக நகர மன்ற தலைவர் எம்.கே.டி.கார்த்திக்தண்டபாணி தலைமை தாங்கினார். துணை தலைவர் வழக்கறிஞர் ஜி.கே.லோகநாதன், தலைமை குழு உறுப்பினர் ஜிஜேந்திரன் ராமு, ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக காஞ் சிபுரம் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சிறுகுறு மற்றும் தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் த.மோ.அன்பரசன், செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன் ஆகியோர் கலந்துகொண்டு தமிழக முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு ராட்சத கேக் வெட்டினர். பின்னர் 500க்கு மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்கள். முன்னதாக அனைத்து வார்டுகளிலும் கட்சி கொடி ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கப்பட்டன. இதில் வார்டு செயலாளர்கள், வார்டு கவுன்சிலர்கள் உட்பட இளைஞரணி, மாணவரணி மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## புதுச்சாவடி அரசு நடுநிலைப்பள்ளியில் தேசிய அறிவியல் தினக்கொண்டாட்டம்

ஜெயங்கொண்டம் மார்ச்05

அரியலூர் மாவட்டம் ஜெயங் கொண்டம் ஒன்றியம் புதுச்சாவடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியர் சாந்தி தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

அறிவியல் பட்டதாரி ஆசிரியர் செங்குட்டுவன் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தார். கணித பட்டதாரி ஆசிரியர் அனைவரையும் வரவேற்றார். வானவில் மன்ற கருத்தாளர் ஆனந்தவள்ளி கலந்து கொண்டு மாணவர்களுக்கு தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுவதின் சிறப்புகளையும் சர் சி வி ராமன் அவர்களின் ஒளிச்சிதறல் சார்ந்த சோதனை ஆய்வு கட்டுரை நோபல் பரிசு பெற




காரணமாக இருந்தமை பற்றி மாணவர்களுக்கு விளக்கிக் கூறி ஒளியியல் சார்ந்த முற்பட்டக நிறப்பிரிகை சோதனை

ஒளிச்சிதறல் மாயமாகும் நீர் காந்த ஊசி திசை காட்டும் கருவி சதவீத கணித செயல்பாடுகள்

கூட்டு வடிவங்களில் பரப்பளவு மற்றும் சுற்றளவு காணுதல் கண்ணின் கதை மற்றும் செயல்பாடு போன்ற அறிவியல் செயல்பாடுகளை மாணவர்களுக்கு செய்து காட்டி மாணவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு விளக்கம் அளித்தார்.


மாணவர்கள் மற்றும் ஆசிரி யர்கள் தேசிய அறிவியல் தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். ஆசிரியர் ஹேமலதா நன்றி கூறினார்.

## பெரியகுளம் ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோவிலில் கும்பாபிஷேகம்

பெரியகுளம் மார்ச் 05

தேனி மாவட்டம் பெரியகுளம் வடகரை கடைவீதியில் அருள்பாலித்து வரும் ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்மன் பரிவார தேவதைகள் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பா பிஷேகம் விழா நடைபெற்றது. பரம்பரை வைஸ்ய புரோகிதர் ராமநாதன் சாஸ்திரிகள் தலைமையில் காசி ,வா ரணா சி,நாசரேத்,ராமேஸ்வரம்,சுருளி தீர்த்தம் உள்ளிட்ட 48 புண் ணிய தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட நன்னீ ரால் கால யாகசாலை பூஜை, மஹா கணபதி பூஜை, வாஸ்து சாந்தி,கலா கர்ஷனம், கோ பூஜை,பிரதிஷ்டை, பூர்ணாஹுதி,விமான கலச மஹா பூஜைகள் உள்பட ஆறு கால பூஜை நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து





அம்மனுக்கு அலங்காரம், தீபாராதனையுடன் மஹா அபிஷேகம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் கும்பா பிஷேக தலைவர் வெங்கட் ராமன்,கௌரவத் தலைவர் ராஜேந்திரன்,செயலாளர் மோகன்,பொருளாளர் கண்ணன், உப தலைவர்கள் சுப்பிரமணியன், சிவஸ்ரீமோகன், கண்ணன்,இணைச்செயலாளர் வெங்கட்டரமணன்,இணைப் பொருளாளர் நாகராஜன், செயற்குழு உறுப்பினர்கள் பால சுப்பி ரமணியன், ராஜசேகர்,உமா காந் தன், வெங்கடேசன், கணேசன், ரவிச்சந்திரன், விஸ்வநாதன், சீனிவாசன்,சுரேஷ் ,பாபு, சிவராமகிருஷ்ணன் உட்பட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். ஆர்ய வைஸ்ய சபா, ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தான கும்பாபிஷேக கமிட்டி சார்பில் அன்னதானம் வழங்கினர்.

## சிவகங்கை சாலைகிராமம் ஊராட்சியில் ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டிய அமைச்சர்

சிவகங்கை, மார்ச்.5

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், சாலைகிராமம் ஊராட்சியில் நேற்று (03.03.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டி, பணியினை தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், நான்கு ஆண்டுகால நல்லாட்சியில், தமிழகத்தில் அனைத்துத்துறைகளும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் வகையில், சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், ஜனநாயகத்தின் ஆணிவேராக திகழ்கின்ற கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, நகரங்களுக்கு இணையாக கிராமப்புறங்களிலும் அனைத்து மேம்பாட்டு வசதிகளையும் மேம்படுத்திடும் பொருட்டு, அதற்கான நடவடிக்கைகள் தமிழக முழுவதும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கிராமங்களில் அடிப்படை கூடுதல் தேவைகளை நிவர்த்தி செய்திடும் பொருட்டும், பொதுமக்கள் கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதை தவிர்த்திடும் பொருட்டும், அனைத்து அடிப்படை கட்டமைப்புக்களை மேம்படுத்தி, தேவைகளை நிறைவேற்றும் விதமாக,

சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் சார்பிலும் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மூலமாகவும் பல்வேறு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, நகரங்களுக்கு இணையாக அனைத்து கிராமப்புற பகுதிகளிலும் அடிப்படை கட்டமைப்புக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு ஊராட்சிகளுக்கும் தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, மின் விளக்குகள் வசதி, பொது சுகாதார கழிப்பிடம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு முன்பாகவே, அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுநிதியின் கீழும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வூராட்சியில் பொதுமக்களிடமிருந்து வரிப்பணமாக ஆண்டிற்கு சுமார் ரூ.03.00 இலட்சம் வரை வசூல் செய்யப்படுகிறது. அதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளில், சுமார் ரூ.12.00 இலட்சம் வரையிலான வரிப்பணம் இவ்வூராட்சியில் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் சாலைகிராமம் ஊராட்சியில் மட்டும் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் 168 வளர்ச்சித்திட்ட பணிகள் ரூ.10.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடதக்கதாகும்.

அதில், இப்பகுதியைச் சார்ந்த பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றிடும் வகையில், இன்றைய தினம் இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், சாலைகிராமம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ஒட்டு மொத்த வருவாய் திட்டம் 202425ன் கீழ் ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வூராட்சியின் கூடுதல் தேவைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சி திட்ட பணிகள் உள்ளிட்டவைகள் தொடர்பாக, கோரிக்கைகள் இருப்பின் அப்பணிகளும் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

பொதுமக்கள் முதலில் முழுமையாக அறிந்து கொண்டு, அத்திட்டங்களின் பயன்களைப் பெற்று பயன் பெற வேண்டும் என கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி, செயற்பொறியாளர் அனுராதா, இளையான்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) விஜயகுமார், இளையான்குடி வட்டாட்சியர் முருகன், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன், மானாமதுரை நகர் மன்றத்தலைவர் மாரியப்பன் கென்னடி, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சுப.மதிய ரசன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## உத்தமபாளையத்தில் தேர் செல்லும் சாலையை செப்பனிடக்கோரி இந்து முன்னணி இயக்கத்தினர் முற்றுகை போராட்டம்

உத்தமபாளையம் மார்ச் 5

தேனி மாவட்டம் உத்தம பாளையத்தில் வருகின்ற 12ம் தேதி உலக புகழ்பெற்ற தென்காளகஸ்தி என அழைக்கப்படும் அருள்மிகு ஞானாம்பிகை திருக்கோவிலில் மாசி திருத்தேர் திருவிழா வெகு விமர்சியாக நடைபெற உள்ளது. இந்த திருவிழாவின் போது தேர் செல்லும் சாலையானது மிகவும் சேதம் அடைந்து உள்ளதால் அவற்றில் தேர் செல்வது சிரமமான சூழல் ஏற்படும். அதற்காக அந்த சாலையை உடனே செப்பனிட வேண்டும் என கோரி தேனி மாவட்ட இந்து முன்னணி இயக்கத்தினர் உத்தமபாளையம் பேரூராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் செய்தனர்.இந்த போராட்டத்தின் போது பேரூராட்சி அலுவலகத்தில் முன்பாக அமர்ந்து பேரூராட்சி




நிர்வாகத்திற்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த முற்றுகை போராட்டமானது இந்து முன்னனி தேனி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராம்செல்வா, தேனி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி பொதுச்செயலாளர் தங்க .பொன்ராஜா மற்றும் தேனி மாவட்ட வழக்கறிஞர் மோடி கார்த்திக் ஆகியோரது தலைமையில் நடைபெற்றது. முற்றுகை போராட்டத்தின் போது சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர் மற்றும் பேரூராட்சி நிர்வாகத் தினரிடையே பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தையானமதுரை மண்டல செயற்பொறியாளர் ராஜாராம், தலைமையில் பேரூராட்சிகளின் துணை இயக்குனர் பால்பாண்டியன், முன்னிலையில் நடை பெற்றது.பேச்சுவார்த்தையின் முடிவில் உடனடியாக சாலை அமைத்து தரப்படும் என உறுதியளித்ததை அடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட இந்து முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராம்செல்வா கூறுகையில் “வருகிற 7 ஆம் தேதிக்குள் சாலையை சரி செய்து தருகிறோம் என்று கூறினார்கள் அவ்வாறு செய்யவில்லை என்றால் 7ஆம் தேதி இரவு பேரூராட்சி அலுவலகத்தை பூட்டு போடும் போராட்டத்தை நாங்கள் நடத்துவோம்“ என்று கூறினார்.



திருப்பூர் மாவட்டம் வடக்கு உட்கோட்டத்திற்கு உட்பட்ட மாநில நெடுஞ்சாலையான திருப்பூர் விஜயமங்கலம் சாலை 5 கிலோ மீட்டருக்கு (திருப்பூர் ரயில் நிலையம் முதல் குளத்துப்பாளையம் வரை) போக்குவரத்துக்கு சீராக செல்லும் வகையில் தார் நொடிகள் அமைக்கப்பட்டு பராமரிப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது இதனால் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏதுமின்றி வாகனங்கள் சென்றுவர சாலை ஏதுவாக இருக்கும் என உதவிக் கோட்ட பொறியாளர் விஜயகுமார், இளநிலைப் பொறியாளர் ராஜேஷ் தெரிவித்துள்ளனர்.

## சிவகங்கை மாவட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்

சிவகங்கை, மார்ச்.5



வருகின்ற 19.03.2025 அன்று திருப்பத்தூர் வட்டத்தில் நடைபெறவுள்ளதையொட்டி, வருகின்ற 11.03.2025 முதல் 17.03.2025 வரை திருப்பத்தூர் வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில், பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை நேரில் கொடுக்க விரும்பினால் வருகின்ற 11.03.2025 முதல் 17.03.2025 வரையிலான அரசு அலுவலக நாட்களில் திருப்பத்தூர் வட்டத் திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161